# நமது ஈழநாடு

www.namathueelanadu.com




குரல் 04 மலர் 37 ஜூலை 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு, அவர்களது கஸ்டங்களைப் போக்குதற்குத் திட்டமிட்டு செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை.

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

## மின்னிதழிற்கு



# மகிழ்வுடன் வாசித்து மன நிறைவுறும் மின்னிதழ்

தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப அவர்களின் எதிர்பார்ப்புக்களை உலகறிய எடுத்துக் கூறும் நமது ஈழநாடு மின்னிதழ் அகவை நான்கில் புத்துணர்ச்சியுடன் காலடி வைப்பதை மகிழ்வுடன் பாராட்டி நிற்கின்றேன்.



சோமசுந்தரம் பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன குரு முதல்வர்

ஈழத் தமிழ் தேசியத்தின் குறியீடுகளில் ஒன்றாய் நமது ஈழநாடு விளங்குகின்றது. போர்க் கால அனைத்து இடர்களையும் சவால்களையும் எதிர் கொண்டு தமிழ் மக்களின் உரிமைக் குரலாக தொடர்ந்து பயணிக்கும் நமது ஈழநாடு, நவீன காலத்தின் ஓட்டத்திற்கு ஏற்ப இன்றைய கால சூழ் நிலையில் செய்திகளை வழங்குவதில் முன்னிலை வகிக்கின்றது.

தமிழ் உணர்வின் வழி நின்று ஊடக தர்மம் காத்து காத்திரமானதொரு பயணத்தை தொடரும் நமது ஈழநாடு மின்னிதழ் தொடர்ந்தும் சிறப்புடன் வெளிவரவேண்டுமென இறையருளை வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

# தமிழ் மக்களின் ஏகோபித்த பத்திரிகைக்கு வாழ்த்துக்கள்

சமூக ஊடகங்களுள் பழமை வாய்ந்த ஊடகமான பத்திரிகை அவற்றை வாசிப்போருக்கு பல செய்தி களை தந்துள்ளது. ஊர் உலக நடப்புக்களை பல கோணங் களிலிருந்து பத்திரிகைகள் போட்டி போட்டுத் தந்துள்ளன. பல வயதினரையும் கவரும் வண்ணம் பல அம்சங்களைத் பத்திரிகைகள் தாங்கி வந்துள்ளன.

இந்நிலையில் ஈழத் தமிழர்களுக்கென வெளிவரும்



மேதகு ஆயர் பேரருட்திரு கலாநிதி
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்டம்

~நமது ஈழநாடு மின்னிதழ் பத்திரிகை தமிழ் மக்களின் ஏகோபித்த பத்திரிகையாக வலம் வருவதுடன் புதிய அக வையில் கால் பதிப்பதை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

பல சவால்களை எதிர் கொண்டு தாயகத்தில் நடை பெறும் சம்பவங்களைத் தவறாது தாங்கி வரும் மின்னிதழ் பல செய்திகளையும் கருத்துக்களையும், ஆய்வுகளையும் தவறாது வழங்கி வருகிறது.

காலத்துக்கு காலம் பல சவால்கள் அச்சுறுத்தல்கள் இழப்புக்களை இதன் இயக்குனர்கள் பணியாளர்கள் எதிர் கொண்டாலும் சளைக்காமல் நவீன காலத்தின் தேவைக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு பயணிப்பது பாராட்டுக்கு ரியதே. உலகின் எத்திசையிலும் பரந்து வாழும் தமிழர்கள் பயன் பெறும் வகையில் இணையத்திலும் அதன் பணி சிறப்புக்குரியதே.

நமது ஈழநாடு மின்னிதழ் தொடர்ந்தும் சிறப்பாக பயணித்து அதன் பயனை அனைவரும் அனுபவிக்க வேண்டுமென ஆசிகளை வழங்குகிறேன்.

# குருந்தூர் மலையில் மூட்டப்பட்ட தீ?



தீபச்செல்வன்

ஈழ நிலத்தில் ஈழ மக்கள் வாழ முடியாத அவலம் தான் இன்று பெரும் அழுத்தம் மிக்க இனவழிப்பு ஆயுதமாக இனத்தை திருகிக் கொண்டிருக்கிறது. எங்கள் நிலத்தில் வாழ சிங்கள தேசம் தடுக்கிறது. எங்கள் தெய்வங்களை வழிபட சிங்கள தேசம் தடுக்கிறது. ஈழத் தமிழ் மக்கள்மீது அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் பிரயோகிப்பதைப் போல, எங்கள் தெய்வங்கள்மீதும் அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளை சிங்களப் பேரினவாத அரசு பிரயோகித்துக் கொண்டிருக்கிறது. அதன் ஒரு எடுத்துக்காட்டாகவே குருந்தூர்மலையில் நடந்த அட்டூழியம் வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இந்தக் குருந்தூர் மலை யாருடையது? ஈழத்தை சிவபூமி என்கிறார் திருமூலர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சித்தரான திருமூலர், ஈழ நிலமெங்கும் சிவத் தலங்கள் நிறைந்து காணப்பட்டதால் ஈழத்தை சிவபூமி என்று அழைத்தார். ஈழத்தின் நான்கு திசைகளிலும் ஈழத்தின் மையத்திலும் முக்கிய சிவத் தலங்கள் இன்றும் ஈழத்தின் பூர்வீகத்திற்கு சாட்சியங்களாக நிமிர்ந்து நிற்கின்றன. அப்படியொரு ஈழ நிலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பகுதிதான் குருந்தூர் மலை. இங்கு ஆதிசிவன் ஆலயம் அமைந்துள்ளது. அந்த ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்களே அதற்கு சாட்சியாக உள்ளது.

ஆதி அனாதி காலம் தொட்டு அங்கே சிவ ஆலயம் அமைந்திருந்தது என்பதை அங்குள்ள மக்கள் காலம் காலமாக எடுத்துரைத்து வருகின்றனர். அத்துடன் அந்த ஆலயப் பகுதியை சூழ ஈழத்தின் முக்கிய மன்னரான பண்டார வன்னியனின் அரண்மனை காணப்பட்டமையால் அதனை பண்டார வன்னியன் கோட்டை என்றும் அழைத்துள்ளார்கள். இந்த நிலையில் காலம் காலமாக குருந்தூர் மலையை ஆக்கிரமிக்க சிங்கள அரசு பல முயற்சிகளை எடுத்து வந்திருக்கிறது. அதற்கான காரணம் குருந்தூர் மலை ஈழ மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பதனாலாகும்.

கடந்த சில வருடங்களின் முன்னர் குருந்தூர் மலையில் அகழ்வாராட்சி மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் அங்கு எண்முக லிங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குருந்தூர் மலையில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்ற எண்முக லிங்கங்கள் தமிழ்நாட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சிவத் தலங்களின் தொல் பொருள் எச்சங்களாக தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டமை குருந்தூர் மலையின் தொன்மையை எடுத்துரைப்பதுடன் தனித்துவ வரலாற்றையும் பதிவு செய்கின்றன. ஆனால் அதனை சிங்கள பௌத்த பேரினவாதிகள் அடையாள மாற்றம் செய்ய முனைகின்ற அவலத்தை நாம் சந்திக்க நேரிட்டது.

குருந்தூர் மலையில் கண்டுபிடிக்கப்பட்ட எண்முகலிங்கங்கள், சைவ சமயத்தின் எச்சங்கள் என்றும், அவை ஈழத் தமிழ் மக்களின் தொன்மையை பறைசாற்றுபவை என்றும் யாழ் பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்று பேராசிரியருமான சி. பத்மநாதன் தெரிவித்தார்.

என்றாலும்கூட சிங்கள பௌத்த பேரினவாத பேராசிரியர்களும் பௌத்த பிக்குகளும் குருந்தூர் மலை சிங்களவர்களினுடையது என்று கதை எழுதத் துவங்கினார்கள். உண்மையிலேயே வடக்கு கிழக்கில் உள்ள பல சிவத்தலங்களை, சைவ சமய மரபுரிமை மையங்களை சிங்கள பௌத்த அடையாளங்களாக்க வேண்டும் என்று முனைகிறவர்கள் குருந்தூர் மலைமீதும் பொய்யை போர்க்க முற்படுகின்றமையை நாம் எளிதாக உணர்ந்து கொள்ள இயலும்.

1996இற்கு முந்தைய சூழலில் அப்போது முல்லைத்தீவை ஆக்கிரமித்திருந்த இலங்கை இராணுவத்தின் முல்லைத்தீவு இராணுவத் தளபதி பரணமக குருந்தூர் மலையில் விகாரை கட்ட முயற்சி செய்துள் ளார். ஆனால் அது, விடுதலைப் புலிகள் முல்லைத்தீவை கைப்பற்றியமையால் தடுக்கப்பட்டது. குருந்தூர் மலையை பௌத்த சிங்கள பூமியாக்க வேண்டும் என்ற முயற்சி பன்னெடுங் காலமாக நடந்து வந்தது. இந்த நிலையில் நல்லாட்சி எனப்படும் தமிழின விரோத ஆட்சியில் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்றைக்கு பிரதமராக இருந்த போது குருந்தூர் மலை இலக்கு வைக்கப்பட்டது. முனைப்புக்கள் இடம்பெற்றன.

அத்துடன் கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், குருந்தூர் மலை விகாரைக்கு ஸ்ரீலங்கா அரச தரப்பில் அடிக்கல் நாட்டப்பட்டது. என்ற போதும் அங்கு விகாரை அமைக்கவும் சைவ வழிபாடுகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளை நிறுத்தவும் முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது. ஆனால் தமிழர்களுக்கு ஒரு நீதி, சிங்களவர்களுக்கு ஒரு நீதி என்ற பாரபட்சத்தின் அடிப்படையில், பௌத்த சிங்களப் பேரினவாதிகள், நீதிமன்ற கட்டளையை மதிக்காமல் அங்கு தொடர்ந்து விகாரை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

அதற்கு ஸ்ரீலங்கா காவல்துறையும், ஸ்ரீலங்கா இராணுவமும் பாதுகாப்பு அளித்ததது. இதுதான் சிங்களப் பேரினவாதிகளும் இராணுவமும் காவல்துறையும் நீதிமன்றத்திற்கும் அதன் கட்டளைக்கும் அளிக்கும் மதிப்பாகும். இந்த நிலையில் கடந்த ஜூலை 14ஆம் நாளன்று அங்கு பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள தமிழ் மக்கள் சென்றிருந்தார்கள். அவர்களுடன் மக்கள் பிரதிநிதிகளும் அமைப்புச் சார்ந்தவர்களும் சென்றிருந்தார்கள். அங்கு வருகை தந்த சிங்கள மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளவிடாமல் இடையூறு விளைவித்தார்கள்.



பொங்கலுக்காக ஏற்ப்பட்ட அடுப்புத் தீயை ஸ்ரீலங்கா காவல்துறை அதிகாரி ஒருவர் சப்பாத்துக் காலால் மிதித்து அணைத்த நிகழ்வு அங்கு சென்ற மக்களை மாத்திரமின்றி ஒட்டுமொத்த ஈழ மக்களையும் பெரும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது. ஈழ மக்களின் பண்பாட்டு மரபில் அடுப்பு என்பதும் அடுப்பிற்காக ஏற்படும் தீ என்பதும் வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரியது. அதிலும் ஆலயம் ஒன்றில் பொங்கலுக்காக ஏற்படுகின்ற தீயை தெய்வத் தன்மையும் மதிப்பவர்கள் ஈழத் தமிழ் மக்கள். அந்த தீயை சப்பாத்துக்காலால் மிதித்து அழிக்கின்ற கொடுமையை அட்டூழியத்தை என்னவென்பது?

உலகில் சாந்தமான ஜனாதிபதியாக ரணில் விக்கிரம சிங்க தன்னை காணப்பித்து வருகின்றார். அத்துடன் தாம் சிங்கள மக்களுக்கும் – தமிழ் மக்களுக்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் அதற்கு சில நாடுகளின் ஆலோசனைகளைப் பெறுவதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் நடைமுறையில் இலங்கையில் இப்படியான விடயங்கள் தானே நடக்கின்றன? நிலம் இன்னமும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தமிழர்களின் தொல்பொருட் சின்னங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பண்பாடு ஒடுக்கப்படுகிறது. தமிழ் மக்களின் மரபுரிமைகள் அழிக்கப்படுகின்றன.

இப்படி வடக்கு கிழக்கை ஒடுக்கிக் கொண்டு, இலங்கையில் நல்லிணக்கம் செய்கிறேன் என்று பன்னாட்டு சமூகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் இன்றைய ஜனாதிபதி ரணில். முள்ளிவாய்க்காலில் நடந்த இனவழிப்புக்கும் ஈழத்தில் குருந்தூர் மலையில் தொடர்வதைப் போன்ற இன ஒடுக்குமுறைகளுக்கும் பன்னாட்டு நீதி விசாரணை ஒன்றே முடிவையும் தீர்வையும் தரும்.

அதற்கு ஈழத் தமிழ் மக்களின் குரலாக அனைத்துத் தரப்பும் ஒன்றுபட்டு செயற்படுவதே முக்கியமான வழிமுறையாகும்.

# பயணத்தில் மூன்றாண்டுகள்

நவீன உலகின் இற்றைப்படுத்தப்பட்ட கால ஓட்டத்திற்கு ஏற்ப தன்னை புதுப்பித்துக்கொண்ட நமது ஈழநாடு ஊடகம் மின்னிதழ் வழியாக வாசகர்களாகிய உங்களை சந்தித்ததன் மூன்று ஆண்டுகள் நிறைவை பெரும் மகிழ்வோடு கொண்டாடுகின்றது.

இன்றைய உல கின் தொடர்பாடல்கள் அனைத்து டிஜட்டலிசம் அடைந்துள்ள நிலையில் அதுடன் தொடர்புடைய அனைத்தும் அதற்கேற்பவகையில் மாற்றமடையவேண்டிய நிர்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளன. அந்த புதிய மாற்றத்தை நன்கு இனங்கண்ட நமது ஈழநாடு ஊடகம் கடந்த 2020 இல் மின்னிதழ் பத்திரிகை வழியாக புதியதொரு பயணத்தை தொடங்கியது.

புத்திரிகை உலகில் அச்சுப்பதிப்பு எனும் பெரும் விருட்சத்திற்கு மத்தியில் சிறு செடியாக புதிய தொழில் நுட்பத்தையும் எதிர்கால மாற்றத்தையும் கருத்தில் கொண்டு ஆரம்பித்த மின்னிதழ் பதிப்பு வாசகர்களாகிய உங்களின் பெரு வரவேற்புடனும் ஆதரவுடனும் யூலை மாதத்தில் மூவாண்டுகளை அடைந்துள்ளமை பெரு வெற்றியே!

கடந்த 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் உரிமைக் குரலாக தினசரி பத்திரிகையாக தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது ~நமது ஈழநாடு. ஊடக தர்மம் தவறாது நடுநிலையுடன் செய்திகளை வழங்கி தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்தது.

காலகாலமாக ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்ட இலங்கைத்தீவில் இன அடக்குமுறைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்த இப்பத்திரிகையின் துணிச்சல் கண்டு ஆடிப்போன இலங்கை அரசு தனது இரும்புக்கரத்தை நமது பத்திரிகைமீதும் பிரயோகிக்கத்தவறவில்லை. யாழ்.நாவலர் வீதியில் அமைந்திருந்த நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தை 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று அத்துமீறி சோதனை நடத்தி கடமையிலிருந்த ஊழியர்களை அச்சுறுத்தி உடமைகளை தீ வைத்தும் கொழுத்தியது.

இந்த அச்சுறுத்தல்கள் கண்டு துவண்டுவிடாத எமது பத்திரிகை தொடர்ந்து வெளிவந்த போது அடக்குறையின் உச்சக்கட்டமாக எமது பத்திரிகையின் ஊடகவியலாளர்களான செல்வராஜா ரஜிவர்மன் (ஏப்ரல் 20007) மற்றும் சகாதேவன் டிலக்சன் (ஆகஸ்ட் 2007) ஆகிய இருவரும் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர்.




இவ்வாறு நமது ஈழநாடு பத்திரிகையின் குரல்வளை தொடர்ந்து நசுக்கப்பட்டு வந்த நிலையில் ஏனைய பணியாளர்களின் உயிர்களை பாதுகாக்கும் வகையில் பத்திரிகை அலுவலகம் இடைநடுவே தன் சேவையை தற்காலிய நிறுத்தம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

எனினும் தனது உரிமைக் குரலை எவராலும் மௌனிக்க செய்துவிட முடியாது என்ற கர்வத்துடன் மீண்டும் இணையவழியில் தனது சேவையயை தொடர்ந்து இற்றைவரை தமிழ் பேசும் இணையத்தள உலகில் நமது ஈழநாடு தனக்கோர் தனித்துவம் கொண்டு மிளிர்வது யாவரும் அறிந்ததே!

இந்நிலையில் நமது ஈழநாட்டின் மற்றுமொரு பரினாமமமான இணையப்பத்திரிகை குரல்04 மலர் 37 என்ற இலக்கை தொட்டு இவ்வெளியீட்டில் 3 ஆவது அகவை விழாக் காணுகின்றது.

இது வெறுமனே ஒற்றைச்சாதனையல்ல. பொறுப்பாசிரியர்கள், நமது ஊடகவியலாளர் கள், எழுத்தாளர்கள், விளம்பரதார்கள் மற்றும் வாசகர் உங்கள் அனைவரதும் வெற்றியே!

தமிழர் தாயகம் முதல் ஜெனிவா ஐக்கிய நாடுகள் சபையின் அரங்கு வரை துணிச்சலுடன் ஊடகசேவையாற்றிவரும் எமது மின்னிதழ் எல்லோர் போலும் வெறுமனே கட்டுரைகளையும் செய்திகளையும் கொண்டு பக்கங்களை நிரப்பி தந்து விடுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. நமது ஈழநாட்டின் உதவிக்கரம் என்றதொரு உன்னத தளத்தை ஆரம்பித்து தமிழர் தாயகத்தில் எங்கெல்லாம் வாழ்வாதரா உதவி கள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் மாதந்தம் உதவிக்கரம் நீட்டிவருகின்றது. இதனை பொறுப்பாற்றலுடன் செயற்படுத்திவரும் பொறுப்பாசிரியரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான கீத்குலசேகரம் பாராட்டுதலுக்குரியவர்.

இவ்வாறு நமது ஈழநாடு மின்னிதழ் தனது மூன்றுவருடகால பயணத்தில் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு ஒரு போதும் நின்றுவிடாது உலகில் தழிழ்பேசும் திசைகள் எல்லாம் இணையவழியூடாக பயணித்து மாதாந்தம் ஒருமுறை உங்களோடு உறவாடிவருகின்றது.

இந்த பயணம் உங்கள் அனைவரின் ஆசிகளுடனும் ஒத்துழைப்புக்களுடனும் மிக நீண்டதொரு பயணமாக தமிழ்த்தேசிய வாசனையுடன் தமிழர்களின் உரிமைக்குரலாக தொடரும்.

**ஆசிரியர்**
**சுகிர்தன்**



***திருமதி ஆனந்தி சூரியபிரகாசம்***
சிரேஷ்ட ஊடகவியலாளர்.
தலைவர் சர்வதேச
தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்
(IATAJ)

## தமிழ் பேசும் ஊடக அரங்கில் முத்திரை பதித்துள்ளது

தமிழ் தேசியத்தின் வழி நின்று தமிழ் மக்களின் குரலாக பயணித்து 3 ஆண்டு நிறை வைக் கொண்டாடும் நமது ஈழநாடு மின்னிதழுக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

2002 ஆம் ஆண்டு தனது ஊடகப் பயணத்தை அச்சுப்பதிப்பாக ஆரம்பித்த நமது ஈழநாடு பத்திரிகை, அடக்கு முறைகளுக்கு மத்தியில் அஞ்சாது உறுதியுடன் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதை அச்சமின்றி வெளிப்படுத்தி வந்தது. தர்மத்தின் வழி நின்றமைக்காக இப்பத்திரிகை கொடுத்த விலையோ மிகப்பெரியது.

ஆனாலும் உயிர் பலிகளையும் அச்சுறுத்தல்களையும் கண்டு பயணத்தை நிறுத்திவிடாது நவீன யுகத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு தொடர்ந்து பயணிக்கிறது.

தமிழ் பேசும் ஊடக உலகில் தனக்கென ஒரு முத்திரையை பதித்துள்ள நமது ஈழநாடு தெளிந்த சிந்தனையுடனும் நேரிய பார்வையுடனும் வாசகர்களின் மனம் கவர்ந்த மின்னதழாக தொடர்ந்து பயணிக்க வாழ்த்துகிறேன்.

## பசுமை நினைவுகளுடன் வாழ்த்துக்களைப் பகிர்கின்றேன்..!

தமிழ்த்தேசிய ஆன்மா வலுப்பெறுவதற்கும் தமிழ்த் தேசியக் கருத்தியல் பொது சனப்பரப்பில் உயிர்ப்புடன் திகழ்வதற்கும் ஊடகங்களின் பணி இன்றியமையாதது. அந்தவகையில் ‘நமது ஈழநாடு’ வரலாறு தனக்கிட்ட வகிபங்கை மின்னிதழ் வழியில் முன்னெடுக்கும் நான்காவது ஆண்டு உதயமாகியுள்ளமை மகிழ்வைத் தருகின்றது.

‘நமது ஈழநாடு’ இந்தப் பெயர் எனது வாழ்வில் ஒரு துடிப்பான காலப் பகுதியின் அடையாளமாக இருந்தது. உற்சாகமிக்க ஊடகத்துறையில் சாதிக் கமுனைந்த அக்காலத்தின் பதிவ, இன்றைக்கு மின்னிதழாக புதுமலர்ச்சி பெறுவதையிட்டு ஒரு கணம் உடலும் உயிரும் சிலிர்த்துப்போகின்றன.

அந்த மந்திரச்சொல்லின் வீச்சை புதிய ஊடகம் வழியே தரிசிக்கும்போது, குறிப்பாக கனதியான உள்ளடக்கமும், இயல்பான இசைவான வடிவமைப்பும் கொண்டு ‘நமது ஈழநாடு’ உயிர்மூச்சாய் முன் தோன்றி நிற்கும்போது அகவை மூன்றின் வாழ்த்துக்கள்இ மனதின் ஆழத்திலிருந்து உயிர்விசையாய் மேலெழுந்து வருகின்றன. அன்பின் கனகனப்புடன், நெஞ்சார்ந்த தோழமையுடன் என் வாழ்த்துக்கள் நமது ஈழநாட்டை இயக்கும் அனைவருக்கும் உரித்தாகட்டும்.



***பேராசிரியர் சி. ரகுராம்***
பீடாதிபதி
கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# குறைந்தது சமஷ்டி இல்லையேல் தமிழீழம்

## ஈதுவே ஈழத் தமிழர் கோரிக்கை

## தமிழ் தேசிய ஆய்வு அமையம்

தமிழ் கட்சியில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை எழுதுகின்றனர். ஈழத் தமிழ் மக்கள் தனி ஈழம் கேட்டுப் போராடிய நிலையில் தமிழ் கட்சிகள் இன்றைக்கு 13ஆவது திருத்தம் போதும் என்ற நிலைக்கு வந்துள்ளமை அதிர்ச்சி தருகின்ற அதேவேளை, பல்வேறு உண்மைகளையும் சந்தேகங்களையும் அவிழ்த்தும் விட்டுள்ளமையை தமிழ் தேசிய ஆய்வு அமையம் கவனத்தில் கொண்டு வருகின்றது.

களை முன்னெடுத்தார்கள். சிங்கள அரசுகளும் பல ஒப்பந்தங்களை செய்தது. ஆனால் எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. காலம் காலமாக ஆட்சி புரிந்த ஒவ்வொரு அரசும் ஈழத் தமிழ் மக்களை ஏமாற்றியது. சிங்கள ஆட்சி பீடத்திற்கு போட்டி போட்டு ஆட்சி புரிந்த அரசுகள் அல்லது கட்சிகள், ஈழத் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்வதில் மாத்திரம் காலம் காலமாக ஒற்றுமையுடன் செயற்பட்டமையும் இங்கே கவனிக்கத்தக்கது.

இதனால் தமிழ் கட்சிகள் இலங்கையில் தனித்



### இலங்கையில் இன ஒடுக்குமுறை

இலங்கைத் தீவில் ஸ்ரீலங்கா அரசு இன ஒடுக்குமுறையை ஈழத் தமிழ் மக்கள் மீது பேரெடுப்பில் கட்டவிழ்த்துவிட்டது. சிலோன் என்ற பிரித்தானிய அரசு, சுதந்திர சிலோன் அரசாக மாற அன்றைக்கு ஈழத் தமிழ் மக்கள் பல்வேறு வகையிலும் உறுதுணை புரிந்தார்கள். அது மாத்திரமின்றி பிரித்தானிய சிலோன் அரசில் இலங்கை மக்கள் சார்ந்து தமிழ் மக்களே பிரதிநிதிகளாகவும் இருந்தார்கள் என்பது வரலாறு. என்ற போதும்கூட பிரித்தானியர்கள் இலங்கையை விட்டு சென்றதும், சிங்களப் பேரினவாதம் தனது முகத்திரையை கிழித்து இனவாதம் காட்டத் துவங்கியது.

இதன் முதல் கட்டமாக 1956இல் தனிச்சிங்களச் சட்டத்தை சிங்கள அரசு நடைமுறைப்படுத்தியது. இதனால் ஈழத் தமிழ் மக்கள் தனிநாடு கோரிய போராட்டத்தை முன்னெடுக்கப் போகிறார்கள் என்று அன்றைக்கு சிங்கள முற்போக்குவாதிகளே சொன்னார்கள். அதற்குப் பின்னர் 1958முதல் சிங்கள அரசு பல கலவரங்கள் என்ற பெயரில் இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டது. அதன் உச்சமாக 1983 ஜூலைப் படுகொலை எனப்படும் இனப்படுகொலை சிங்கள தேசத்தால் நிறைவேற்றப்பட்டது.

### தனி ஈழமே தீர்வு

இந்த நிலையில் தமிழ் மக்கள் தமக்கான அதிகாரத்தை கேட்டு அகிம்சை வழிப் போராட்டங்

தமிழீழமே தீர்வு உன்ற நிலைப்பாட்டுக்கு வந்தன. இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்களின் அதிகாரங்களை ஒருபோதும் மீள வழங்காது என்ற நிலையிலும் ஈழ மண்ணை சிங்களக் குடியேற்றம் வழியாக ஆக்கிரமித்து, ஈழத் தமிழ் இனத்தை அழித்து ஒழிப்பதே இவ் அரசின் நோக்கம் என்ற நிலையிலும்தான் தனித் தமிழீழத் தீர்மானறத்திற்கு அன்றைய தமிழ் அரசியல் தள்ளப்பட்டது.

### தமிழீழம் பிறந்தது

இந்த நிலையில், தமிழீழ தேசத்திற்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத்தை அமைத்தும் காட்டினர்.

ஆயுதப் போராட்டத்தின் வழியாக பாரிய பலம் பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழீழ நிழல் அரசை ஈழ மண்ணில் நடைமுறைப்படுத்தியதன் ஊடாக இதுவே ஈழத் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பும் சுதந்திரமும் நிம்மதியும் அளிக்கும் தீர்வு என்பதை சிங்கள தேசத்திற்கும் உலகத்திற்கும் எடுத்துரைத்தனர்.

அது மாத்திரமின்றி தமிழீழ அரசு என்பது சமூக விடுதலை கொண்ட சாதிய வேறுபாடுகள் களைந்த ஒரு தேசமாக பரிமாணம் பெற்றது. அத்துடன் சுய பொருளாதாரம், பண்பாட்டு செழிப்பு, கலை வளர்ச்சி, தொழிநுட்ப வளர்ச்சி என அனைத்து விடயங்களிலும் முன்னுதாரணமான தேசமாக ஸ்ரீலங்காவுக்கே சவால் விடும் தேசமாக அன்றைக்கு தமிழீழத்தை தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அமைத்துக் காண்பித்தார்.

### புலிகள் நிராகரிப்பு

இலங்கையில் தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டம் முகிழ்ந்த சமயத்தில், இந்தியா – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் குறைந்தது சமஸ்டி ஆட்சி முறையேனும் வழங்கப்பட வேண்டும் என்றும் இல்லையேல் தனித் தமிழீழமே தீர்வு என்றும் உறுதியாகப் போராடிய காலத்தில் இந்தியாவின் தலையீட்டுடன் 13 கொணடுவரப்பட்டது.

சமஸ்டித் தன்மையற்று, ஒற்றை ஆட்சியின்




கீழ் இனவழிப்பையும் ஒடுக்குமுறையையும் இன்னும் அதிகரிக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அன்றைக்கு விடுதலைப் புலிகள் தரப்பு நிராகரித்தது. என்ற போதும்கூட சிங்கள அரசு 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக சொல்லி தேர்தல் நடாத்தி வடக்கு கிழக்கு மாகாண சபையை அமைத்ததும், பின்னர் ஆளுநர் ஆட்சிகள் நடாத்தியதும் வரலாறு.

### புலிகளின் தீர்மானம் நியாயமானதே

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கினால் போதும் என்றும் சில தமிழ் தரப்புக்கள் கூறுகின்றன.

ஆனால் 13ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்த காலத்தில்தான் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய இனப்படுகொலைகள் நடைபெற்றன.

பாரிய யுத்த முன்னெடுப்புக்கள் நடைபெற்றன. 13ஆவது திருத்தத்தினால் இவைகளை தடுத்து நிறுத்த முடியவில்லையே?

அதேபோன்று முள்ளிவாய்க்கால் யுத்தம் சிங்கள அரசால் முன்னெடுக்கப்பட்ட போதும்கூட, 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தவே யுத்தம் என்று அன்றைய அதிபர் மகிந்த ராஜபக்ச சொன்னார்.

ஆனால் இன்றுவரை 13 முழுமையாக நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் 13இற்காகவே முள்ளிவாய்க்கால் போர் நடந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படி பார்த்தால் அன்றைக்கு விடுதலைப் புலிகள் 13ஐ நிராகரித்து மிகவும் நியாயமும் தீர்க்க தரிசனமும் கொண்ட முடிவு என்பதை இன்று நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கின்ற தமிழ் அரசியல் கட்சிகள் எவராக இருந்தாலும், அல்லது சர்வதேசத்திடம் கோரிக்கை விடுக்கின்ற தரப்புகள் எனிலும், 13ஆவது திருத்த்தின் ஆபத்துக்களை எடுத்துரைத்து, அதன் வரலாற்றை எடுத்துரைத்து, அதலிருந்து ஈழத் தமிழினத்தை பாதுகாக்க குறைந்தது வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் மாநிலத்தில், சமஸ்டி தீர்வை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுங்கள் என்பதை அறிவுபூர்வமாக கேளுங்கள், அதற்காக போராடுங்கள் என்பதை தமிழ் தேசிய ஆய்வு அமையம் வலியுறுத்தி நிற்கிறது.


3 ஆண்டுகள் பயணத்தில்...
நமது ஈழநாடு
விடுதலைப் புலிகள் மீதான தடை தவறு!
எங்கள் உறவுகள் எங்கே?
தமிழீழத்தை என் கண்களாவது பார்க்கட்டும்
இதயத்தில் மூட்டிய தீ
தீ தின்ற தேசத்தின் விடுதலைத் தீ
திலீபம்
தடைகள் நீங்க மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
தேடியலைந்து ஓய்ந்துபோனோம்
எம் தேசத்தின் சுடர்களுக்காய்...
இராணுவம் புதைத்ததை தொல்பொருளாய் தேடாதே!
Send Gifts to Srilanka
திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது தமிழ்த்தேசிய உணர்வை தட்டியெழுப்பியது
அபகரிப்பை நிறுத்து!
நினைவேந்தல் எமது உரிமை!
'நமது ஈழநாடு' பணிப்பாளர் சிவமகாராஜாவின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்
அகவை 1
கோட்டாபயவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு!
மற்றுமொரு இனக்கொலை
போர் தந்த பசி ஆறமுன்
எமக்காய் எரிந்த சூரியர்கள்
Cour Pénale Internationale
International Criminal Court


3 ஆண்டுகள் பயணத்தில்...
அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா..
இங்கிலாந்தில் ஒரு யாழ்ப்பாணம்
Welcome to Royal Borough of Kingston upon Thames NEW MALDEN Twinned with Jaffna
வலிசுமந்த பயணத்தில் இன்றும் அகதிகளாயே நடக்கின்றோம்
புலிகளில்லா காட்டிற்குள்...
WHERE IS MY SON
2300 நாட்களைக் கடந்து...
இரண்டாயிரம் நாட்களைக் கடந்து...
பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய் PTA
காலத்தை உருவகிப்பவர்களுக்கு அஞ்சலி
மின்னிதழிற்கு அகவை 2
விடுதலைத் தீ மூட்டியோன்
சூறையாடப்படும் தமிழர் கடல்
சூறையாடப்படும் அடையாளங்கள்
இதுவா... இனநல்லிணக்கம்...?
எங்க, முருகனை காணோம்..?
Don't Create New laws to
வேண்டாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்
தொலைத்தவரை தேடுவோம் தோட்டாக்கள் பாய்ந்தாலும்
நான் இறப்பதற்குள்...

# புதிய ஆண்டில் தடம் பதிக்கும் பயணம்



உண்மையை உரிய நேரத்தில் தாங்கி வரும் நமது ஈழநாடு மின்னிதழ் பத்திரிகை மூன்று வருடங்களை பூர்த்தி செய்து நான்காது ஆண்டில் கால் பதிப்பதை மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக் குரலாக தொடர்ந்து பயணிக்கும் நமது ஈழநாடு தாயக மக்களின் நிரந்த விடுதலைக்கு வலுச்சேர்க்கும் ஊடகமாக செயற்பட்டுவருகிறது.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை மற்றும் தாயக மக்களின் உரிமைக் குரலாகவும் அவர்களின் நிரந்தர அரசியல் பொருளாதார விடுதலைக் குரலாகவும் செயற்படும் நமது ஈழநாடு, தொடர்ந்தும் அதே வீச்சுடன் பயணிக்க நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

*திரு. பாலகிருஷ்ணன்*

முன்னாள்
தமிழீழ வைப்பக
ஆளுகை மேலாளர்,
அரசியல் மற்றும்
பொருளாதார ஆய்வாளர்
- பிரித்தானியா

## தமிழர்களின் உரிமை தீயை அணையவிடாது உயிரூட்டும் நமது ஈழநாடு மின்னிதழ்

ஈழத் தமிழரின் சுதந்திர தாகத்திற்கும் தமிழின அழிப்பிற்கான அனைத்துலக நீதிப்பாதைக்குமான தேசப்பணியில் உலகத் தமிழர்களை விளிப்பூட்டும் ஒரு கருவியாக வெளிவரும் நமது ஈழநாடு மின்னிதழ் மூன்றாவது ஆண்டில் தடம்பதிக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த இரண்டு வருட காலமாக, 36 இதழ்களை தமிழின அழிப்புக்கான நீதிகேட்டும் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கும் சமரசமற்று பலத்த சவால்களுக்கு மத்தியிலும் வெளியிட்டு வரும் நமது ஈழநாடு இலாப நோக்கற்று இரவு பகல் பாராது செயற்படும் பணியாளர்களின் அயராத உழைப்பால் உலகத் தமிழர்களை ஒரே புள்ளியில் இணைக்கின்றது.

தமிழர்களின் உரிமைக்கும் நீதிக்குமான போராட்டத்தில் தடம்மாறி செல்லும் தமிழர் தரப்புக்களை சரியான தரவுகள் ஊடாக சீர்திருத்தி அவர்களை உரிய பாதையில் கொண்டுவருவதற்கு நமது ஈழநாடு மின்னிதழ் ஒரு ஆயுதமாக கடந்த இரண்டு வருடமாக செயற்பட்டு வருகின்றது.

அதற்கு உதாரணமாக கடந்த 12 வருடங்களாக தமிழர்களுக்கு இடம்பெற்றது இனவழிப்பு தான் என உறுதிப்படுத்துவதற்கு ஆதராம் போதாது என கூறிக்கொண்டிருந்த தரப்பினர் தற்போது கடந்த சில மாதங்களாக தமிழர்களுக்கு இடம் பெற்றது தமிழின அழிப்பு என குறிப்பிட்டு பேச தொடங்கியுள்ளனர். இதில் நமது ஈழநாடு மின்னிதழின் பணி அளப்பரியது.

அந்தவகையில் இனவழிப்பால் பாதிக்கப்பட்ட தமிழ் தரப்புகள், தமிழீழம், தமிழ்நாடு மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழர் உரிமை சார்ந்து செயற்படுபவர்கள், ஆளுமைகள் மற்றும் இளையோரின் கருத்துகளை வெளிக்கொணர்வதன் ஊடாக தமிழர்களின் உரிமைக்கான தீயை அணையவிடாது தொடர்ந்து பற்ற வைத்துக்கொண்டுள்ளது. ஒரு மக்களின் விடுதலைக்கு துணிச்சல் மிக்க ஊடகவியலாளர்களின் பங்கு இன்றியமையாதது, களத்தில் நிற்காமல் கட்டுரைகளை எழுதும் ஊடகவியலாளர்களுக்கு மத்தியில், குறிப்பாக ஜெனிவாவில் களம் இறங்கத் துணிந்த நமது ஈழநாடு ஆசிரியர் குழுவிற்கு நன்றி.

மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளின் போது, குறிப்பாக ஜெனிவாவில் களத்திற்கு வந்து ஆழமான கள ஆய்வுடன் எழுதுவதற்கு தைரியம் காட்டிய நமது ஈழநாடு ஆசிரியர் குழுவிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


இவ்வாறு தமிழர்களின் உரிமை சார்ந்து பல்வேறு விடயங்களை தாங்கிவரும் நமது ஈழநாடு மின்னிதழ் பன்னாட்டு உரிமை தளங்களின் பொறிமுறைகள் தொடர்பிலும் அங்கு ஈழத் தமிழர்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் பற்றிய தெளிவூட்டல்களை வழங்குவதோடு அவை தொடர்பில் புதிய தகவல்களை தொடர்ச்சியாக பதிவேற்ற வேண்டும் என இச்சந்தப்பத்தில் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்

தமிழர்களின் உரிமை தீயை அணையவிடாது உயிரூட்டும் நமது ஈழநாடு மின்னிதழ் தொடர்ச்சியாக வெளிவருவதற்கு உலகத் தமிழர்கள் தமது பேராதரவினை வழங்க வேண்டும்.



*பொஸ்கோ மரியதாஸ்*

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் மற்றும் பன்னாட்டு இணைப்பாளர்
உலகத் தமிழர் இயக்கம்.



# கறைவிலகாத கறுப்பு ஜுலை

## '40 ஆண்டுகள் கடந்தாலும் ஆறாத வடுக்களும், வலிகளும்'

**ஆதி**

இரத்தக்கறை மாறாத "கறுப்பு ஜுலை" 1983ஆம் ஆண்டு இனக்கலவரங்கள் இடம்பெற்று 40 ஆண்டுகளாகின்றன. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இதில் கொல்லப்பட்டனர். வகைதொகையின்றி படுகாயமடைந்தார்கள்.

தலைநகர் கொழும்பு மற்றும் நாட்டின் தென்பகுதி நகரங்களில் தமிழர்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு சூறையாடப்பட்டன. தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான வீடுகள், கட்டடங்களுக்கு தீ வைக்கப்பட்டன. வீதிகளில் வாகனங்கள் மறிக்கப்பட்டு தமிழர்கள் இருக்கின்றார்களா என்று தேடித் தேடி தமிழர்கள் மீது தாக்குதல்களை சிங்கள இன வெறியர்கள் திட்டமிட்டு நடத்தினார்கள்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதி இராணுவத்தினர் பயணம் செய்த வாகனங்களின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 13இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள்.

ஆயுத மோதல்கள் சிறிய அளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடை பெற்றுக் கொண்டிருந்த அந்தக் காலப் பகுதியில் ஒரே தாக்குதல் சம்பவத்தில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிகழ்வு தென்னிலங்கையை உலுக்கியது. ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த ஜே.ஆரின் நாற்காலியின் நான்கு கால்களும் ஒரு அதிர்வினை உணர்ந்தன.

அந்நிகழ்வில் படுகாயமடைந்திருந்த மேலும் இரண்டு படைச் சிப்பாய்கள் பின்னர் மரணமடைந்ததையடுத்து, இந்தத் தாக்குதலில் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 15ஆக உயர்ந்திருந்தது. ஆயினும் இந்தச் சம்பவத்தில் உடனடியாகக் கொல்லப்பட்ட 13இராணுவத்தினரே பொதுவாக உயிரிழந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

இறந்த இராணுவத்தினருடைய சடலங்களுக்கு கொழும்பு பொரளையில் உள்ள கனத்தையில் இறுதிநிகழ்வுகள் செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. இதனை உறவினர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் விரும்பவில்லை. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இது பின்னர் கலவரமாக வெடித்தது.

எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப்போன்று யாழ்ப்பாணத்தில் பௌத்த பிக்கு ஒருவரை உயிரோடு எரித்து விட்டார்கள் என்றும், கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் வந்து விட்டார்கள் என்றும் காட்டுத் தீ போன்று பரப்பப்பட்ட வதந்தி களையடுத்து, கொழும்பு நகரின் பல இடங் களிலும், ஏனைய பல நகரங்களுக்கும் கலவரங்கள் பரவின.

இந்தக் கலவரங்களில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். சில இடங்களில் குடும்பமாகத் தமிழர்கள் கொல்லப்பட்ட தாகவும் செய்திகள் வெளியாயின. இக்கலவரங்களில் சுமார் 3000 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணிப் பீடுகள் தெரிவிக்கின்றன. ஆயினும் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகம் என்றே கூறப்படுகின்றது.

நகரப்பகுதிகளில் மட்டுமல்லாமல் மோசமான குற்ற செயல்களில் ஈடுபட்ட சிங்களர்கள் கைதிகளாக இருந்த கொழும்பு வெலிக்கடைச்சிறைச்சாலையில், மற்றொரு பகுதியில் அரசியல் கைதிகளாக தமிழர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். வெளியே கலவரம் ஏற்பட்டிருந்த நிலையில் சிறைக்காவலர்களாக இருந்த சிங்களர்களால், தமிழர்கள் அடைக்கப்பட்டிருந்த சிறைக்கதவு திறக்கப்பட்டு, சிங்களக்கைதிகளால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

குட்டிமணி, ஜெகன், தங்கதுரை அரசியல் கைதிகளாக நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்ட 53 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மரண தண்டனை விதிக்கப்பட்டபோது நீதிமன்றத்தில் குட்டிமணி "தான் இறந்த பின்னர் தன்னுடைய கண்களை எடுத்து பார்வையில்லாத ஒருவருக்கு பொருத்தி சுதந்திர தமிழ் ஈழத்தைக் காண விரும்பு வதாகக்கூறினார்.

ஆனால், சிங்களக் கைதிகள் சிறையிலேயே குட்டிமணியைத் தாக்கி கொலை செய்து, அவருடைய கண்களைப் பிடுங்கி நசுக்கிய கொடுமை அன்றைய நாளில் நடைபெற்றது.

உலக வரலாற்றில் மிகமோசமான சிறைக்கலவரமாக சிறைச்சாலைப் படுகொலையாக இது பதிவாகியுள்ளது. பின்னாளில் பல அரசியல் திருப்பங்களுக்கு வித்திட்டிருந்த இந்த வன்முறைகளில் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இந்த வன்செயல்கள் காரணமாக சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்குரிய ஆக்கபூர்வ மான எந்த நடவடிக்கைகளும் பின்னர் வந்த அரசுகளாலும் மேற்கொள்ளப்படவில்லை.

37 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இனக்கலவர வன்முறைகள் குறிப்பிட்ட தமிழினத்தை முற்றிலுமாக அழிப்பதற்கான நடவடிக்கையாகவே இலங்கைத் தமிழ் மக்களால் கருதப்படுகிறது

1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதியில் இலங்கை தலைநகர் கொழும்புவில் தமிழர்களுக்கு எதிராக சிங்கள காடையர் கும்பலால் நடத்தப்பட்ட கலவரத்தினால் ஏறத்தாழ 2000க்கு மேற்பட்ட தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஆனால் அரசாங்க புள்ளி விவரங்கள் வெறும் 471 பேர் என்று குறிப்பிடுகின்றன.

தலைநகரில் மட்டும் ஏறத்தாழ 3700கடைகள், எண்ணுக்கணக்கற்ற தமிழர்களின் வீடுகள் உடைக்கபட்டும், எரிக்கப்பட்டும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இதற்கு காரணம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 இலங்கை இராணுவப் படையினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதே ஆகும்.

இராணுவத்துக்கும், போராளிகளுக்கும் இடையில் யுத்தத்தில் படையினர் கொல்லப் பட்டால் அதன் கோபத்தை, அப்பாவி மக்கள் மீது காட்டும் கோழைத்தனமான, தமது கேவலமான பழிவாங்கலாக திட்டமிட்டு நடத்தப்பட்ட கலவரங்கலாகும்

தமிழ் குழந்தைகள் எரியும் தார் பீப்பாக்களில் போடப்பட்டு கொல்லப்பட்டனர். தமிழ் பெண்களின் மார்பில் சுடு தாரால் 'ஸ்ரீ என எழுதப்பட்டது. பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக்கிழித்து குழந்தையை எடுத்து நெருப்பில் போட்டனர். உயிருடன் கொளுத்தப்பட்ட தமிழர்கள் பலர். இவ்வாறு இன்னும் சொல்ல முடியாத பல கொடுமைகள் சிங்களவர்களால் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டன.

தமிழன் உயிர்வாழ விரும்பினால் தமக்கென்று ஒரு நாடு வேண்டும் என்று ஆயுதம் தூக்க வழிவகுத்தது இந்த 1983 ஜூலை. வரலாற்றில் கருப்பு ஜூலை என்று குறிப்பிடப்படுகிறது.

பட்ட துன்பங்களை மறக்க கூடாது. இதை அடுத்தடுத்தத் தலைமுறைகளுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். சர்வதேச அளவில் உள்ள தமிழர்கள் கறுப்பு ஜுலையின் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளவேண்டும் என்கிற அளவில், தமிழர்களுக்கென்று ஒரு நாள் விடியும் என்கிற எதிர்பார்ப்பில் பன்னாட்டளவில் உள்ள தமிழர்கள் காத்திருக்கின்றனர்.

## உண்மையை உரக்கக்கூறும் நமது ஈழநாடு

நான்காவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் தமிழர்களுக்கான உண்மையை உரக்கக்கூறும் நமது ஈழநாடு மின்னஞ்சலுக்கு எனது வாழ்த்துக்கள். தாயகத்திலும் புலத்திலும் நடக்கும் செய்திகளை உடனுக்குடன் தமிழர்கள் அறியக் கூடியவகையில் தொடர்ந்து தனது இணயத்தில் அறியத்தரும் நமது ஈழநாடு கடந்த 3 வருடங்களாக மின்னித ழ் பத்திரிகை வழியாகவும் தமிழ் தேசியம் சார்ந்த கட்டுரைகளுடனும் செய்திகளுடனும் எம்முடன் உறவாடி வருகிறது.

ஊடகப் பரப்பில் தனக்கெனதொரு முத்திரையை பதித்து தொடரும் நமது ஈழநாட்டின் முதன்மை செய்தி ஆசிரியருக்கும் அவருடன் பணியாற்றும் சக தோழர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

நாங்கள் நாடு கடந்து வந்தாலும் ஈழநாடு தான் எம்தேசம் என்பதை என்றென்றும் மறவாமல் அதே பெயருடன் வெற்றி நடை போடும் உங்களுக்கு என்றென்றும் தமிழர்கள் தோள் கொடுப்பார்கள். உங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.



**கௌரவ முனைவர் சொக்கலிங்கம் யோகலிங்கம்**
பாராளுமன்ற உறுப்பினர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

## ஈழம் சிந்தும் கண்ணீர் துடைக்க நமது ஈழநாடு தொடர்ந்து பாடுபட எமது உளமார்ந்த ஆசிகள்

ஈழத்தமிழ் நாட்டின் விடுதலைக் குரலாக தமிழ் தேசிய இனத்தின் பன்னாட்டு குரலாக 3ம் ஆண்டில் தடம் பதிக்கும் ஊடகமாகிய "நமது ஈழநாடு" தற்கால தொழில்நுட்பத்தின் ஊடான நம் பாரம்பரியம் மாறாது வெகுஜன இணைய பத்திரிகைகளில் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து மூன்றாம் ஆண்டில் கால் பதிக்கும் இன்நாளில் பாதிக்கப்பட்ட தமிழ் தாய் மார்கள் ஆகிய நாம் எமது உளமார்ந்த ஆசிகளை தெரிவித்து நிற்கின்றோம்.

நமது ஈழநாடு மென்மேலும் நடுநிலை தவறாது மூலை முடுக்கெல்லாம் இலகுவில் பயணிக்கும் இலத்திரனியல் பத்திரிகையாக வலம்வந்து தொடர்ந்தும் ஈழமக்கள் அனுபவித்த! அனுபவிக்கும் துன்பங்களை வெளிக்கொண்டு வர வேண்டும் என மனதார வாழ்த்துகிறோம். ஈழம் சிந்தும் கண்ணீர் துடைக்க நமது ஈழநாடு தொடர்ந்து பாடுபடவேண்டும் என்று ஆசிகூறி நிற்கிறோம்.



**திருமதி லீலாதேவி ஆனந்தநடராஜா**
செயலாளர், வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம்



## நமது ஈழநாட்டின் உதவிக்கரம்





































நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டு கோளிற்கிணங்க யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாவீரர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் குடும்பங்களிற்கு அவர்களின் வாழ்வாதரத்திற்கு தேவை யான உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் முகமட் முகமது சாலிக் முகமது ஹசான் மற்றும் ரடிக்கா மகேசி ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் இவ் உதவித்திட்டம் வழங்கிவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுற்றோர் சங்க மண்டபத்தில் நடைப ெற்ற இந்த உதவித்திட்ட நிகழ்வில் பெண் தலைமைக் குடும்பம் ஒன்றிற்கு அவர்களின் வாழ்வாதரத்திற்கு தேவையான ஆடு வளர்ப்பிற்காகா ரூபா 50 ஆயிரமும் போரினால் பாதிப்படைந்த இருவருக்கு அவர்களின் மருத்துவ செலவிற்காக தாலா 25 ஆயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்தோடு யாழ் மாவட்டத்திலிருந்து 8, கிளிநொச்சியிலிருந்து 11 மற்றும் முல்லைத்தீவிலிருந்து 7 பயணாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.